திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஊரில் தொழிற்பேட்டை அமைப்பதென்றால்—அரசாங்கம் நினைத்தாலே அமைக்க முடியுமா? அல்லது சுற்றுப்புற சூழ்நிலையை அனுசரித்துத்தான் அது அனுமதிக்கப்படுமா ? அல்லது கனிமங்கள் கிடைத்தால்தான் தொழிற்பேட்டை அமைக்கப்படுமா ? இதில் அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா செங்கற்பட்டு மாவட்டத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்ததாகும். அதுபற்றிய விவரம் தான் இங்கே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட வினாவுக்கு விளக்கம் பெற விரும்பினால், தனியாகக் கேள்வி கேட்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் வாடுகிற—22 ஆண்டுகளுக்கு மேலாகவும் வறட்சியையே இன்னும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற—களத்தூர் பிர்க்காவில் அவசியம் ஒரு தொழிற்பேட்டை அமைக்கப்பட வேண்டுமென்றுதான் நான் இந்த வினாவையே கொடுத்தேன். அப்படி அமைப்பதற்கு என்னென்ன தேவைகள் மூல காரணமானவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் ஏற்கெனவே 9 இடங்களில் தொழிற்பேட்டைகளும், 14 இடங்களில் சிறு தொழிற்பேட்டைகளும் அமைக்கப்பட்டிருப்பதால், புதிதாகத் தொழிற்பேட்டை ஒன்றை களத்தூர் பிர்க்காவில் நிறுவும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொண்டு விவரங்களைப் பெற விரும்பினால் அதற்குரிய யோசனைகளையும் வினாக்களையும் முறையாக அரசிடம் சமர்ப்பிக்க வேண்டுகிறேன்,

(முற்பகல் 10-00)

தொண்டியில் மீன்பிடி துறைமுக வேலை.

4 .(* வினா எண் 468)—திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம், தொண்டியில் மீன்பிடி துறைமுக வேலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(இ) வேலை மீண்டும் தொடங்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ஒப்பந்ததாரர் தனது நிதி நிலைமை மோசமாக உள்ளதால் உதவித் தொகை அளித்திடக்கோரி பணியினை நிறுத்தியுள்ளார்.

(இ) எஞ்சிய பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரத்தையொட்டி இருக்கின்ற நெல்லை, சிதம்பரனார் மாவட்டங்களில் கேரளாவிலிருந்து மெஷின் போட் மூலமாக இறால் மீன்களை பிடித்துக் கொள்கிறார்கள். இதனால் இந்த இரண்டு மாவட்டங்களிலுள்ள மொத்த மீனவர்களுக்கும், அவர்களுக்கும் அடிக்கடி தகராறு ஏற்படுகிறது, எனவே மாநிலத்திற்கென்று கடலிலே எல்லையை வரையறை செய்து மீன்பிடிக்க எல்லைக்கோட்டை முடிவு செய்கின்ற எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது குறித்து தனியாக வினா எழுப்ப வேண்டும்.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொண்டியிலே காலதாமதமாக இந்தத் துறைமுகம் கட்டப்படுமென்று கூறுகிறார்கள். அந்தத் துறைமுகத்தைக் கட்டுவதற்கு உறுதுணையாக இல்லாதவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ? அங்குள்ள ஏனைய மீனவர்களுக்கு சிறப்புத் திட்டங்கள் ஏதாவது இந்த அரசிடம் இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொண்டி மீன்பிடி துறைமுக வேலை சம்பந்தமாக அரசு ஒப்பந்தக்காரர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்துப் பரிசீலனையில் உள்ளது. மற்ற மீன்பிடி தொழில்கள் சம்பந்தமாக தனியாகக் கேள்வி போட்டால் விடை தரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொண்டி துறைமுகம் என்று சொலவது, மீனவர்களுக்கு மட்டுமல்ல, நம்முடைய பொருளா

தாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் கூட முக்கிய மான துறைமுகமாக இருக்கின்றது. இந்த வேலை எப்போது தொடங்கப்பட்டது, இதனுடைய மதிப்பீடு என்ன, ஒப்பந்தக் காரர் எப்போது தனக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்பதை அரசிடம் சொல்லி உதவிகள் கேட்டிருக்கிறார், அது சம்பந்த மாக அரசு என்ன உத்திரவு பிறப்பித்து இருக்கின்றது, இனி மேலாவது இந்த அரசு இதுபற்றி உடனடியாக ஆய்ந்து நட வடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு 2-4-1983-ல் மத்திய அரசு நிதி உதவியுடன் ரூ. 41 லட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திருவாளர்கள் காம்பிளக்ஸ் பெல் பவுண் டேஷன் என்ற நிறுவனத்திற்குப் பணியை மேற்கொள்ள 1983-ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியின் ஒப்பந்தத் தொகை ரூ. 37.35 லட்சம் ஆகும். ஒப்பந்தக்காரர்களுக்கு அரசு ஏற் கெனவே ரூ. $1\frac{1}{2}$ லட்சம் கடனாக அனுமதி வழங்கியுள்ளது. இதற்குப் பின்னரும் பணியை முடிக்காத காரணத்தால் அரசே நேரடியாகப் பணியைத் துவக்கலாமா அல்லது மறு ஒப்பந்தப் புள்ளி கோரிப் பணியை முடிக்கலாமா என்பது அரசின் தீவிர மான ஆலோசனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, தொண்டியில் மீன்பிடி துறைமுக வேலை சம்பந்தமாக அமைச்சரவர்கள் பதிலுரை அளித்தபோது அதிலே ஒப்பந்தம் செய்துகொண்ட ஒப்பந்தக்காரர்கள் கட்டுப்படியாகவில்லை என்று சொல்லி வேலையை நிறுத்தி விட்டார்கள், மறுபடியும் அவர்கள் வேலை செய்வதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். ஏனென்றால் நாட்கள் கடக்கக் கடக்க அதனுடைய மதிப்பீட்டுத் தொகை, செலவுத் தொகை கூடக்கூட வேலை நடைபெறாத நிலை ஏற்பட்டு இந்தத் திட்டம் நிறைவேற முடியாமல் போய்விடுமோ என்ற பயம், அச்சம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, எவ்வளவு காலத்தில் அதை முடிப் பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அத்திட்டத்தை விரைவிலே முடிப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளும் ; கால அவகாசம் குறித்துக் கூற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, சோழ மன்னர்களின் காலத்திலேயே சிறப்பு வாய்ந்த தாக இருந்தது தொண்டி. அந்தத் தொண்டியிலே கட்டப்படுகின்ற

1989 மார்ச் 27]

மீன்பிடி துறைமுகம் சில தவறுகளின் காரணமாக கட்டப் படாமல் இருப்பதாக நாங்கள் எண்ணுகிறோம். அந்தத் துறை முகத்தை விரைவிலே கட்ட வேண்டும். அந்தத் துறைமுகத்தைக் கட்டி முடிப்பதற்கு இந்த அரசுக்கு இன்னும் எவ்வளவு நாட்கள் தேவை என்பதை அறிய விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பூம்புகாருக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து அதைச் சிறப்புமிக்க நகரமாக ஆக்கினார்களோ அதைப்போல தொண்டியையும் சிறப்புமிக்க துறைமுகமாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சிறிய குறுக்கீடு. நம்முடைய மதிப்புமிகு உறுப்பினர் திரு. கே. ஆர். இராமசாமி அவர்கள் தொண்டியினுடைய வரலாற்றுச் சிறப்புப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் அவர் குறிப்பிடுவது இந்தத் தொண்டி அல்ல. அது சேர நாட்டில் இருக்கிற தொண்டி என்பது என்னுடைய கருத்து. இது கருத்து தான். வேண்டுமானால் நம்முடைய புலவர்களெல்லாம் ஒரு தடவை கூடி ஆய்வு செய்யலாம்.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் எங்களது மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கும் அதனுடைய சிறப்புத் தெரிந்ததால்தான் இவ்வளவும் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் அந்த வேலை சம்பந்தமாகச் சில தவறுகள் நேர்ந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். அதனைத் தனியாக எழுத்து மூலம் தெரிவித்தால் நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒப்பந்தம் எப்பொழுது நிறைவு பெற்றது ? அந்த ஒப்பந்தக் காரர்கள் யார் ? அவர்கள் செலுத்திய (Earnest Money Deposit) எவ்வளவு ? அதிலே உள்ள ஷரத்துக்கள் என்ன ? இப்படி அவர்கள் காண்ட்ராக்டை நிறைவேற்றாவிட்டால் அவர்கள்மீது நஷ்டஈடு கோர வேண்டுமென்ற ஷரத்து அதிலே இணைக்கப்பட்டிருக்கிறதா என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற விவரங்களுக்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தொண்டியிலே கட்டப் படுகின்ற மீன்பிடித் துறைமுகப்பணி அந்த ஒப்பந்தக்காரர்களுக்கு

எந்தக் காலத்திலே ரத்து செய்யப்பட்டது? அந்த ஒப்பந்தக் காரர்கள் செய்யவில்லை என்றால் அரசாங்கம் வேறு ஒரு ஒப் பந்தக்காரர் வழியாக அந்த வேலையைச் செய்வதற்கான செயற் குறிப்பு ஏதாவது ஆய்வில் இருக்கிறதா? அப்படிக் காலதாமதம் ஏற்படுமானால் நம்முடைய அரசாங்கத்தின் ஒரு பகுதியான ''கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷன்'' என்ற ஸ்தாபனம் இருக்கிறதே, அதன் மூலமாகவாவது அந்தத் திட்டத்தைச் செய்து அந்த மக்களுடைய-மீனவர் களின் குறைகளை நீக்கு வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 31-12-1988-க்குள்ளாகப் பணியை முடிக்க வேண்டுமென்று அரசு எச்சரிக்கை செய்துள்ளது. அதனை யும் மீறி ஒப்பந்தக்காரர்கள் பணியினை முடிக்காமல் இருக்கின்ற காரணத்தினால், தற்பொழுது தவறு இழைத்தோர் பட்டியலில் ஒப்பந்தக்காரரை இணைத்து விடுவோம் என்று கூறி ஒப்பந்தக் காரர்களுக்கு இறுதி எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. இந்த நோட்டீசுக்குப் பதிலைப் பெற்றவுடன் அரசாங்கம், துறையே நேரடியாகப் பணியினை மேற்கொள்ளலாமா அல்லது மறு ஒப்பந்தம் கோரிப் பணியினை முடிக்கமாமா என்பதைப்பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இப்படி ஒப்பந்தத்தை நிறைவேற்றாத, தவறிழைத் தோர் பட்டியலில் சேர்க்கப்படக்கூடிய ஒப்பந்தக்காரர்கள் மீண் டும் ஒப்பந்த மனு கொடுப்பதற்குத் தடைக்காலம் ஏதேனும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தடைக்கால அளவு பற்றித் தெரிந்துகொள்வதற்குத் தனிக் கேள்வியினைப் போட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தவறிழைத்தோர் பட்டியலிலே இணைக்கப்படுகின்ற ஒப்பந்தக் காரர்களை மீண்டும் அரசு அணுகாது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, தொண்டி துறைமுகப் பகுதிக்கு நேரடியாகச் செல்லு கின்ற வாய்ப்பைப் பெற்றவன் என்கின்ற முறையில், இந்தப் பகுதியிலே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற மீன்பிடி துறைமுகங் களிலேயே, தொண்டி துறைமுகப் பகுதி மீன் வளர்ச்சியிலே முதன்மை பெற்ற இடமாக இருக்கிறது. இந்தப் பகுதியிலே

வெளிநாட்டுக்காரர்கள்கூட மறைமுகமாக வாரக் கணக்கிலே தங்கி மீன்பிடித்து திருட்டுத்தனமாகக் கொண்டு போகிறார்கள் என்பதும் அங்கே இருக்கக் கூடியவர்களால் சொல்லப்பட்டது. ஆகவே, ஏதோ ஒரு காரணத்தினால், இந்தத் துறைமுகத்தின் அபிவிருத்தித் திட்டம் தடைபட்டுப் போய் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் இனியாவது ஆய்ந்து, அதற்காக ஒரு தனிக் குழுவை அமைத்து, இப்படிப்பட்ட செயல்பாடுகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டி மீன்பிடி துறைமுகம் குறித்து எழுப்பப்பெற்ற இந்தக் கேள்விகள் அந்தத் துறைமுகம் விரைவில் உருவாவதற்கு உதவும் என்று நம்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கேட்ட கேள்விகளின் அடிப்படையில், அந்தக் கேள்விகளைத் துணையாகக் கொண்டு உடனடியாக அரசு அது குறித்து நடவடிக்கையெடுக்கும் என்ற உறுதியை இந்த அவைக்குத் தருகிறேன்.

திரு. ஐ. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டி துறைமுகத்தை அமைப்பதற்கு ஏற்கனவே ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுத்திருந்த கால அவகாசம் முடிந்து விட்ட காரணத்தால், அதை அரசு எடுத்துக்கொண்டு நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, இது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இத்துறைமுகம் விரைவில் நிறைவேற்றப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். அதற்காக அந்தத் தொகுதியைச் சார்ந்த உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS